# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**OS.No.666/2019**

2024 ஆ ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் திங்கட்கிழமை சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் திரு .ஆர். சிவசங்கர் , உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ராஜமாணிக்கம் | Caste | |
| த/பெ. | திரு– சீனிவாசன் | Calling | பேன்ஸிஸ்டோர் |
| Village | திருப்பராய்த்துறை | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 70/2024 |

<u>குறுக்கு விசாரணை -</u>

வழக்கு சொத்து எனக்கு சொந்தம் என்பதற்கு ஆவணங்கள்உள்ளதா என்றால் ஆவணம் இல்லை.எனக்கு சொந்தமான சொத்தின் சர்வே எண். என்ன வென்றால் 175/1A1 ஆகும். அசல் வழக்கு 1214/2005 எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சிலபேர் என்னை கடை நடத்தவிடாமல் தொந்தரவு செய்யததால் வழக்கு தாக்கல் செய்தேன் .ஂஎன்னடைய அசல் வழக்கு 1214/2005 ன் பிராதில் பத்தி 4 ல் (வாதி மீது பொறாமை கொண்ட பிரதிவாதி வழக்கிடை சொத்தில் தனக்கு உரிமை இருப்பதாக கூறிக்கொண்டு கடந்த 27.07.2005 தேதியன்று பிரதிவாதி ஆட்களுடன் வந்து வாதி கடையில்உள்ள டெலிபோன் பொருட்களை சேதபடுத்தி பலாத்காரமாக தாவா சொத்தை ஆக்கிரமித்து எத்தனித்தார் ) என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான் . நான் நடத்தி வரும் கடைக்கு மின் இணப்பு உள்ளதா என்றால் உள்ளது . மின் இணைப்பு எண் . 445 ஆகும். மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் இராதகிருஷ்ணன் பெயரில் உள்ளது . எத்தனைவருடங்களா மின்இணைப்பு உள்ளது என்றால் 2005 லே இராதகிருஷ்ணன் பெயரில் மின் இணைப்பு உள்ளது . இந்த கடைக்கு எந்த வருடம் வந்தேன் . என்றால் 1990 ல் இருந்து இருக்கிறேன். அன்றையதினத்திலிருந்து இன்றையதினம் வரை மின் இணைப்பு இருந்தது மாற்றப்படவில்லை என்றால் 1990 ல் என்பெயரில் மின் இணைப்பு இருந்தது . எந்த வருடம் மின் இணைப்புஇராதகிருஷ்ணன் பெயரில் மாற்றப்பட்டது என்றால் 2005 ல் மாற்றப்பட்டது. 1990 லிருந்து 2005 வரை என்பெயரில் மின் இணைப்பு இருந்ததற்கான ஆதாரங்கள் இருக்கிறதா என்றால் ஆவணங்கள் என்னிடம் இல்லை. என்பெயரில் இருந்த மின் இணைப்பிற்கான நெம்பர் தெரியுமா என்றால் அதன் எண். 123 ஆகும்.2005 ல் கடையை புதுபித்தேன் அப்போது மின்சார அலுவலகதிலிருந்து வந்து 06 மாத காலம் மின்

இணைப்பை துன்டித்துஇருந்தார்கள் . மறுபடியும் திருப்பாராயத்துறை உதவி பொறியாளரிடம் நான் விண்ணப்பம் கொடுத்தேன் பின்னர் 3 நாட்களில் மின் இணைப்பு கொடுத்துவிட்டார்கள் .மாதம் மாதம் இராதகிருஷ்ணன் பெயரில்தான்மின் இணைப்பு ரசீது வருகிறது . மின் இணைப்பு பெயர்மாற்றம் கேட்டு மனு செய்துள்ளேனாஎன்றால் செய்துள்ளேன். வழக்கு போட்டதற்கு முன்பு மின் இணைப்பு துன்டிக்கப்பட்டதா அல்லது வழக்கு போட்டதற்கு பின்பு மின் இணைப்பு துன்டிக்கப்ட்டதா என்றால் வழக்கு போடுவதற்கு முன்பே. மின் இணைப்பு துன்டிக்கப்பட்டது.14.07.2006 ம் வருடம் எனக்கு அந்த வழக்கில் தீர்பானது என்றால் சரிதான் . என்னுடைய சுவாதீனத்தில் இராதகிருஷ்ணன்தொந்தரவு செய்யக்கூடாது என்று தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த வழக்கில் மொத்தம் 17 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் ஒரு ஆவணம் கூட மின்சார கட்டணம் செலுத்தியதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை . என் பெயருக்க மின் இணைப்பு மாற்றம் செய்து தரவேண்டி அசல் வழக்கு 1214/2005 முடிந்த பின்பு அதன் தீர்ப்பின் நகலை வைத்து என் பெயருக்கு மின் இணைப்வு வேண்டி மனு கொடுத்தேன் . அதை வாங்கிக்கொண்ட உதவி பொறியாளர் இராதகிருஷ்ணனை அழைத்து விசாரித்ததில் வழக்கு நிலுவையில் இருப்பதால்வழக்கு முடிந்தபின் என் பெயருக்கு மாற்றிதருவதாக சொன்னார். 2005 ம் ஆண்டு நான் இராதகிருஷ்ணன் எதிரராக மேற்சொன்ன ஒரு வழக்கை தவிர வேறு எந்தவழக்கும் எங்களுக்கு இடையே கிடையாது . நான் உதவி பொறியாளரிடம் பெயர் மாற்றம் செய்யவேண்டி மனு கொடுத்தந்த பட்சத்தில் வழக்கு நிலுவையில் இல்லாதபொழுது உதவி பொறியாளர் என் பெயருக்கு மாற்றிக்கொடுத்திருப்பார் என் பெயரில் மின் இணைப்பே இல்லாததல் வழக்கிற்காக பொய்யாக நான் மின் இணைப்பு வேண்டி மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . பொது தொலைபேரி இணைப்பு வாங்குவதற்காக கடையின் உரிமையாளரான இராதகிருஷ்ணன் என்பவரிடமிருந்து எழுத்துபூர்வமான ஆட்சேபணை இல்லைஎன்று ஆவணத்தை பெற்றுக்கொண்டதன் பெரில்தான் இராஜ இராஜ மாணிக்கம்என்பவருக்கு பொதுதொலைபேசி நடத்துவதற்கு BSNL அலுவலத்தால் அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல . வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணத்தில் கடை எண் மற்றும்முகவரி குறிப்பிடபடவில்லை என்றால் கடைவீதி திருப்பாரய்த்துறை என்பதுதான் என்னுடைய கடையின் முகவரி . வரியின் கடை எண் குறிப்பிடபடவில்லை. கதவு எண் .181/1 சிவன்கோவில் தெரு திருப்பாராய்துறை திருச்சி என்ற முகவரி என்னுடைய கடையின் முகவரி

**இல்லை என்றால் சரியல்ல** .. 1/181 **என்பது என்னுடைய கடை எண்ணாகும்**.

**குறுக்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது**.

**Sd/-xxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

Sd/-xxxxx

District Munsif – Cum - Judicial Magistrate,

**Srirangam**